# 'ஆப் பம்ப்' அறுவை சிகிச்சையில் கோவை மெடிக்கல் சென்டர் சாதனை

**கோவை, மே 4-**

இருதய துடிப்பை நிறுத்தாமல், 150 நோயாளிகளுக்கு 'ஆப் பம்ப்' அறுவை சிகிச்சை மேற்கொண்டு, கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனை டாக்டர்கள் நூறு சதவீத வெற்றி கண்டுள்ளனர்.

கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனை டாக்டர் நந்தக்குமார் கூறியதாவது:

இருதயத்துக்கு ரத்தத்தை எடுத்துச் செல்லும் குழாய்களில், சுவர்களில் கொழுப்பு படிந்து, குழாய்களில் சுருக்கம் ஏற்படுகிறது. நாளடைவில் இதுவே கட்டியாகி ரத்த ஓட்டத்தை தடைபடுத்துகிறது. ரத்த நாளங்கள் சிதையும் வாய்ப்பும் ஏற்படுகிறது. இருதயத்துக்கு ரத்த ஓட்டம் குறையும்போது, ஆபத்து ஏற்படும்.

ரத்தக்கசிவு, பக்கவாதம், சிறுநீரக பாதிப்பு, உணர்விழத்தல் போன்ற சிக்கல்கள் ஏற்படும். இதை தடுக்க 'பை பாஸ்' அறுவை சிகிச்சை அவசியம். இருதயத்தை நிறுத்தாமல் மேற்கொள்ளப்படும் இச்சிகிச்சையை, 'ஆப் பம்ப்' சிகிச்சை எனப்படுகிறது. இருதய, நுரையீரல் இயக்க கருவிகளால் இது மேற்கொள்ளப்படுகிறது.

கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில், 1997ம் ஆண்டு முதல் இச்சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றன. சிறுநீரக கோளாறால் டயாலிசிஸ் மேற்கொள்ளும் நோயாளிகள், தீராத இருதய நோயாளிகள், ரத்த நாள அடைப்பு ஏற்பட்டவர்கள் ஆகியோருக்கு இச்சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

உடலுக்கு வெளியே ரத்த ஓட்டத்தை வெளியே வைத்துக் கொள்ளாமல், ரத்த நாளங்களிலோ டியூப் இணைக்காமல் செய்யப்படுவதால், ரத்தம் செலுத்துதல் மற்றும் செயற்கை பாதுகாப்பு கருவிகள் தேவையில்லை. டாக்டர் நந்தக்குமார் தலைமையிலான குழுவினர், இத்தகைய சிகிச்சையை ஐந்து மாதங்களில், 150 அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர்.

இருதய அறுவை சிகிச்சையை டாக்டர்கள் ஸ்ரீநாத், கிருஷ்ணானந்த், மயக்கவியல் மருத்துவர்கள் சிவக்குமார், ஆப்ரஹாம் ஜெரால்டு ஹென்றி, சிவக்குமார் உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.